23.07.2025.

# கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம் (விரைவு நீதிமன்றம் )

## விழுப்புரம்

## அமர்வு வழக்கு எண்.35/2025

அ.சா.5

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ரியாசுதீன் | | |
| த/பெ | சுலைமான் சேட் | | |
| கிராமம் | ஜானகிபுரம் | தொழில் | கூலி வேலை |
| தாலுக்கா | விழுப்புரம் | வயது | 37/2025 |
| மாவட்டம் | விழுப்புரம் | தேதி | 23.07.2025 |

இன்று உதவியாளர் அவர்களால் சத்திய பிரமாணம் செய்யவிக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

## முதல் விசாரணை

நான் தற்போது மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் விழுப்புரத்தில் கூலி வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசர், கைப்பற்றுதல் மகசர்களில் உள்ள ஒன்றாம் கையெழுத்து என்னுடையதுதான். கடந்த 05-08-2024 அன்று காலை சுமார் 8.00 மணியளவில் எங்கள் ஊர் கமாலுதீன், சதாம் உசேன் ஆகியோர்களை சரவணன், வீரப்பன் ஆகியோர் சேர்ந்து தாக்கிய வழக்கு சம்பந்தமாக விசாரணை செய்ய தாலுக்கா காவல் நிலைய ஆய்வாளர் அவர்கள், விசாரணை செய்து கொண்டிருந்தார்கள். அப்போது நான் சம்பவ இடம் குறித்து தயார் செய்ய உள்ள வரைபடம், பார்வை மகசர் ஆகியவற்றில் சாட்சியாக இருக்கிறீர்களா என்று என்னை கேட்டார்கள். நானும், என்னுடன் இருந்த சதாம் உசேன் என்பவரும்

ஏற்றுக்கொண்டு, அவர்கள் தயார் செய்த பார்வை மகசரில் நாங்கள் இருவரும் கையொப்பம் செய்தோம். பிறகு அங்கு கிடந்த ஒரு இரும்பு பைப்பை கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றினார்கள். அதிலும் நாங்கள் இருவரும் கையொப்பம் செய்தோம். அந்த இரும்பு பைப்பை பார்த்தால் என்னால் அடையாளம் காட்ட முடியும். சாட்சி அதை சரியாக அடையாளம் காண்பித்தார். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசர் அ.சா.ஆ.2 ஆகும். கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ.3 ஆகும். இரும்பு பைப் சா.பொ.1 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. இது சம்பந்தமாக காவல்துறையினர் ஏற்கனவே என்னை விசாரணை செய்தார்கள்.

**<u>1ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

இரண்டு காவலர்கள் அங்கு வந்தார்கள். வரைபடத்தில், மகசர்களில் உள்ள விவரங்கள் எதுவும் எனக்குத் தெரியாது. கையெழுத்து போடச் சொன்னார்கள். போட்டேன். நான் அதே ஊர் என்பதால் அந்த இடம் எங்களுக்கு பரீட்சயமான இடம் என்றால் சரிதான். என்னை விசாரணை செய்யும்போது அங்கு சதாம் உசேன் என்பவரை தவிர யாரும் இல்லை. இரண்டு போலீசார் அங்கு வந்து சுமார் அரை மணி நேரம் இருக்கும். 8.30 மணிக்கு எல்லாம் கிளம்பி விட்டார்கள். இரண்டு போலீசாரும் வேறு உபகரணங்கள் எதையும் எடுத்து வரவில்லை. நான் அந்த சமயத்தில் சம்பவ இடத்திலேயே இல்லை என்றும், அ.சா.1 எனது உறவினர் என்பதால் நான் பொய் சாட்சியமளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. அதுபோன்று என் எதிரில் காவல்துறையினர் எந்தவிதமான வரைபடமும் வரைந்து, ஆயுதங்களை கைப்பற்றவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் காவல் நிலையத்தில் வைத்து தான் கையெழுத்து போட்டேன் என்று சொன்னால் சரியல்ல.

**<u>2ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

சாட்சி அபிபுன்னிசா எனது அத்தை. சாட்சி கமாலுதீன் எனது அக்கா வீட்டுக்காரர். நான் அவர்கள் அனைவரும் எனது உறவினர்கள் என்பதால், அவர்களுக்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>**

**இல்லை**